2. விதி 111-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருத்த அறிக்கை

வேலைநிறுத்தம் செய்ததற்காக விசாரணைக்குட்படுத்தப்படும் அரசு ஊழியர்கள் எண்ணிக்கையில் திருத்தம்

திரு. சி. ஞானசேகரன்: *தலைவர் அவர்களே...*

திரு. துரைமுருகன்: *தலைவர் அவர்களே....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *துரைமுருகன், உட்காருங்கள். இதை முடித்துவிட்டு உங்களைக் கூப்பிடுகிறேன்.*

பேரவை விதி 111-ன்கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருத்த அறிக்கை ஒன்று அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு ஊழியர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக, சட்டமன்றப் பேரவையில் 6-11-2003 அன்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி. பழனிசாமி மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் பேசும்போது நான் பின்வருமாறு விளக்கம் அளித்தேன்:*

"மீண்டும், மீண்டும் ஒன்றரை இலட்சம் பேரை வேலையை விட்டு நீக்கம் செய்து விட்டோம், இரண்டு இலட்சம் பேரை வேலை நீக்கம் செய்து விட்டோம் என்கிறார்கள். ஏற்கெனவே, இந்த வேலை நிறுத்தம் செய்வதற்கு முன்பாக எத்தனை பேர் தமிழக அரசுப் பணியில் இருந்தார்களோ, அத்தனை பேரும் இப்போதும் பணியில் இருக்கிறார்கள். 6,072 பேர்களைத் தவிர..." என்று குறிப்பிட்டிருந்தேன்.

உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அன்றையதினம் குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட எண்ணிக்கை 6,072. ஆனால் பின்னர், அது திருத்தப்பட்டு சரியான இறுதி எண்ணிக்கை 5,729 எனக் குறைக்கப்பட்டது. எனவே உச்ச நீதிமன்ற ஆணைப்படி நியமிக்கப்பட்ட மூன்று நீதிபதிகள், தற்போது இந்த 5,729 பேரின் மனுக்களை விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே நேற்று நான் குறிப்பிட்ட 6,072 பேர் என்பதைத் திருத்தி 5,729 பேர் என்று அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.